மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 409/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

பெயர்	:	தஞ்சியப்பன்	வயது	: 59
த.பெ	:	கோவிந்தசாமி	தாலுக்கா	:
கிராமம்	:	தேப்பனந்தல்	தொழில்	: ஆசிரியர்

12.06.2025 – வா.சா. முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன்.

கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 29.08.1984 தேதியிட்ட முனியமேஸ்திரி வகையறா வாதியின் தந்தைக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திர அசல் வா.சா.ஆ.1. (எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

2. 24.05.2012 தேதியிட்ட பட்டா எண்.206 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.

3. 26.04.2012 தேதியிட்ட களம்பூர் சார்பதிவாளர் செயல்முறைகள் ஆணை வா.சா.ஆ.3.

4. பசலி 1424 ம் வருடத்திற்கான அடங்கள் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4

5. 24.05.2012 தேதியிட்ட கோவிந்தசாமி என்பவரின் இறப்புச்சான்றிதழ் வா.சா.ஆ.5.

6. என் தகப்பனார் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.6.

7. என் அப்பா பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் வா.சா.ஆ.7.

8. என் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.8

மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆவணங்களின் குறியீடுக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-B.Salma,

District Munsif,

Polur.